# கனுக்கடிய முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறும் அதன் வளர்ச்சிப் போக்கும் 1990-2015

**Mohammad Haneefa Mohammad Nairoos[1], Mohammad Jamees Inul Hadiqa, Mohammad Jabeer Fathima Naseeha[2]**

[1]Senior Lecturer, Department of Islamic Studies, Faculty of Islamic Thought and Civilization, South Eastern University of Sri Lanka

[2]Department of Islamic Studies, Faculty of Islamic Thought and Civilization, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

*கல்வியானது ஒரு நாட்டின் சகல துறைகளினதும் வளர்ச்சிக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது. கல்வி என்பது மனிதனின் சிந்தனைஇ ஒழுக்கம்இ ஆற்றலஇ நுணுக்கம்இ திறன்இ ஆளுமை என்பவற்றை விருத்தி செய்யும் ஊடகமாக காணப்படுகின்றது. உலகளாவிய மனிதர்களிடையேயான தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தியினை இலக்காகாக் கொண்டு இயங்குகின்ற ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. இந்த வகையில் ஆண்இ பெண் இருபாலாருக்கும் கல்வி பெறுவது கட்டாயக் கடமையாகும். இவ்வாய்வானது "கனுக்கடிய முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறும் அதன் வளர்ச்சிப் போக்கும் (1990-2015)" எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இந்த ஆய்வானது ஆய்வு பிரதேசத்தின் முஸ்லிம்களின் வரலாற்றை அறிமுகப்படுத்தல்இ ஆய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாற்றை அறிதல்இ ஆய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிப் போக்கை மதிப்பீடுதல் போன்றவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. பண்புசார் மற்றும் தொகை சார் தன்மையைக் கொண்ட இவ்வாய்வானது முதல் நிலைத் தரவுகளாகிய (Primary Data) இப்பிரதேச வாழ் பெற்றோர்கள;, மாணவிகள் போன்றோருக்கான அவசியமான வினாக்களை உள்ளடக்கிய வினாக்கொத்து, அவதானம;, நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்தும்இ மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) மூலம் கல்வி பற்றிய பொதுவான தகவல்களும் ஆய்வு பிரதேசம் தொடர்பாக வரலாறும் நிறுவப்பட்டுள்ளது. Excel எனும் கணக்கியல் மென்பொருள் வீதங்கள்இ எண்ணிக்கை கண்டறிய பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது கிட்டதட்ட 600 குடும்பங்களில் 200 மாதிரிகளைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் ஆய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வியானது முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போது ஓரளவு வளர்ச்சியினைக் கண்டிருப்பினும் சமகால உலகிற்கு எற்ப முன்னேற்றமடையவில்லை என்பதே உண்மையாகும். அதாவது கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி நிலையைப் பொறுத்த வரையில் ஓரளவு வளர்ச்சி நிலையினைக் கொண்டிருப்பினும் அவ்வளர்ச்சியானது தற்கால கல்வி வளர்ச்சிப் போக்கிற்கேற்ப வளர்ச்சிக் காணவில்லை என்பதே இவ்வாய்வின் இறுதி முடிவாகும். இவ்வாய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியில் சாதகமான முன்னேற்றத்தை அடைய வேண்டுமானாமல் இப்பிரதேசத்தில் கல்வி விழிப்புணர்ச்சிக் கட்டமைப்பொன்றை ஸ்தாபித்து அதன் மூலம் பல்வேறு பிரதேச கல்வி அமைப்புகளையும் ஒன்றினைத்து ஒரு வலைப்பின்னலை உருவாக்க வேண்டும். இதனால் வளவாளர்களை பகிர்ந்துக் கொள்ள கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.*

**திறவுச் சொற்கள்:** கல்வி, முஸ்லிம் பெண்கள் , குடும்பம் கனுக்கடிய பிரதேசம், கல்வி நிறுவனம்

## 1. ஆய்வின் அறிமுகம்



ISBN 978-955-627-120-1

கல்வியானது மனித வாழ்வை ஒழுங்கமைப்பதற்கும்இ மனித சமுதாயத்திற்கான சிறந்த வழிக்காட்டியாகவும் காணப்படுகின்றது. கல்வியானது ஆண், பெண் இருபாலாருக்கும் பொதவானதாகக் காணப்படுவதுடன் சிறந்த சமூக உருவாக்கத்திற்கு அடிப்படையாகவும் அமைகின்றது. எனவே இதனடிப்படையில் ஓர் ஆய்வு தேடுதலாகவே அமைகின்றது. "கனுக்கடிய முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறும், அதன் வளர்ச்சிப் போக்கும் (1990-**2015)"** எனும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒன்பது மாகாணங்கள் காணப்படுகின்றன. அம்மாகாணங்களில் வடமேல் மாகாணமும் ஒன்றாகும். இங்கு 1,610,299 க்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருவதனை காணலாம். குருநாகல் மாவட்டமும் வடமேல் மாகாணத்தில் மாபெரும் ஓர் மாவட்டமாகும். இதனுல் 30 நிர்வாக வலயங்களினுள் நிக்கவரடிய வலயமும் ஒன்றாகும். அதனுல் ஆறு முஸ்லிம் பிரதேசங்கள் காணப்படுகின்றன. ஆறு பிரதேசங்களில் கனுக்கடிய பிரதேசமும் ஒன்றாகும். இக் கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை விளங்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் கல்வியில் ஓரளவு கற்க முன்வரினும் பெரும்பாலும் அவர்கள் கலைத்துறையை மட்டுமே தெரிவு செய்கின்றனர். ஏனைய துறைகளை தெரிவு செய்வதில்லை என்பதே ஆய்வு பிரச்சினையாக காணப்படுகின்றதென்பதே ஆய்வு பிரச்சினையாக காணப்படுகின்றது.

## 3. ஆய்வின் நோக்கம்

கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி ரீதியான துறைகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்படாமை பெரும் குறையாகவே காணப்படுகின்றது. கனுக்கடிய முஸ்லிம் பெண்களை கல்வி ரீதியாக தூங்கிக் கொண்டிருக்கும் அச்சமூகத்தை விழித்தெழச் செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- ஆய்வு பிரதேசத்தின் முஸ்லிம்களின் வரலாற்றை அறிமுகப்படுத்தல்
- ஆய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாற்றை அறிதல்
- ஆய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிப் போக்கை மதிப்பீடுதல்

## 4. ஆய்வுக் கேள்விகள்

1. கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறு எவ்வாறானது?
2. கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிப்போக்கு யாது?

## 5. ஆய்வின் முக்கியத்துவமும் பரப்பெல்லையும்



ISBN 978-955-627-120-1

இவ்வாய்வானது கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வித் தரத்தையும், அதன் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் விளக்க முனைகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு தமது சமுகத்தின் தரத்திற்கு ஏற்ற வகையில் எதிர்கால நடவடிக்கைகளாகக் தீர்மானிக்க வழி செய்யும் என்பது உறுதி. கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் மத்தியில் கல்வியில் ரீதியான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது, கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது இவைகளே இவ்வாய்விற்கான கருதுகோள்களாக காணப்படுகின்றது. 1990 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியினை ஆராய்கின்றது.

## 6. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முதன்மை தரவுகள் மூலமாகவும். இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமாகவும் தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்விற்கான தரவுகளை நேர்காணல், வினாக்கொத்து போன்ற முதன்மை தரவுகள் மூலமும் நூல், பத்திரிகை, சிறு நூல் தொகுப்பு, இணையம் ஆய்வுக்கட்டுரை, ஒலி நாடா, முன்னைய ஆய்வுகள், இருவெட்டுக்கள், அறிக்கைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமாகவும் தகவல்கள் பெறப்பட்டு Excel எனும் கணக்கியல் மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## 7. கல்வி பற்றிய கோட்பாட்டு ரீதியான அடிப்படைகள்

கல்வி என்பது ஒரு மனிதனின் உடலஇ உளஇ சமூக மற்றும் ஆன்மீக, கலாச்சார ரீதியான சகல சக்திகளையும் இடையறாது விருத்தி செய்கின்ற ஒரு நிலையான செயன் முறையாகும். அத்துடன் கல்வி என்பது கற்றல் என்பதனை அடிப்படையாக கொண்டே உருவானதாகும். கல்வியினை 03 வகைகளாக பிரிக்கலாம். அவைகளாவன :

- முறைசார் கல்வி (Formal Education)
- முறையியல் கல்வி (Informal Education)
- முறைசாரா கல்வி (Non Formal Education)

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட கல்வியானது சில அடிப்படைகளைக் கொண்டதாகும். அவ்வடிப்படைகளாவன:

- சகித்துக்கொள்ளல் (Tolerance)
- ஏற்றுக்கொளளல்(Acceptance)
- பாராட்டுதல்(Apprectation)
- பிறர் உணர்வை பெறுதல்(Empathy)
- நன்றி கூறுதல் (Acknowledgement)
- திறந்து கலந்துரையாடல் (Open stimulant Discussion)
- உணர்சியைக் கட்டுப்படுத்தல் (Managing Emotins)



ISBN 978-955-627-120-1

ஒரு நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாகக் கொள்கைகள் கொண்டே வகுக்கப்படுவதனைக் காணலாம். இக்கல்வியானது அடிப்படைகளைக் போன்றே பல பண்புகளையும் கொண்டுள்ளது. அப்பண்புகளான:

- கல்வியை வரையறுப்பது கடினம்
- பூரணமான ஒரு அபிவிருத்தியாகும்.
- முறை முறைசாரா வழிகளில் பெறலாம்.
- குறிப்பிட்டளவு எல்லைக்குட்படுத்தப்பட்டு கல்வியை பெறலாம்.
- பல்வேறு முறைகளிலும் பெறலாம்.
- கல்வி வாழ்க்கை நீடித்த இயல்புடையதாகும்
- நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கல்வியை பெறலாம்.

கல்வியானது சமூக கெயற்பாடுகளை ஒழுங்கமைக்கக் கூடியதாகும். கல்வி தொடர்பாக மகாத்மா காந்தி , ஜே எப் ஹேர்பர்ட் ,வில்லியம் வேட்ஸ்வர்த் போன்ற அறிஞர்கள்

''கல்வியைப் பெற்ற மனிதன் நல்லவனாகவே வாழ்வான்'' (சோக்ரடீஸ்)

''கல்வி என்பது ஒருவனை நல்லவனாக்கும்'' (பிளோட்டோ).

''புலன்கள் முதுமையுடையவை.சிந்தனை மேம்பாடுடையவை.'' (பிளேட்டோ).

போன்ற பல கருத்துக்களை முன் வைத்துள்ளதனைக் காணலாம். இவர்களின் கருத்துப்படி சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் நடந்து கொள்வது உயர்ந்த சீரிய முறையில் ஒழுகுதலே கல்வி என்பதனைக் விளங்கலாம்.

கல்வி தொடர்பாக கிரேக்கவாதிகள், மேற்கத்தேயவாதிகள், தாராண்மைவாதிகள், மாக்ஸியவாதிகள் போன்றோர் பல கருத்துக்களை முன்வைத்து அவை இன்று கல்வி கோட்பாடுகளாக வளர்ந்துள்ளதனைக் காணலாம். அரிஸ்டோட்டில், பிளேட்டோ, சோக்ரடீஸ், ஜோன் லூயி, கார்ல் மாக்ஸின் கருத்துக்களை வைத்துப் பார்ப்பின் ஜனநாயக கல்வியினை முக்கியப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அறிஞர்கள் மட்டுமன்றி பிற மதங்களிலும் கல்வி தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். இந்து மதம் கல்வியறிவை பெற மெய்யறிலையும், சிந்தனை வழியையும், குருக்குலக் கல்வியையும், பௌத்த மதம் தர்மக்கல்வி கொள்கைகளையும் , கீதையின் படி சூானயோகம், பக்தியோகம், கர்மயோகம் போன்ற வழிகளிலும் கல்வியினைப் பெறலாம். இஸ்லாம் கல்வி கற்பதென்பது கடமை எனவும் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

''உமக்கு கற்பிக்கப்பட்ட நன்மையானவற்றை நீ எனக்கு கற்பிக்கும் நிபந்தனை மீது நான் உம்மைப் பின்பற்றலாம்.'' al- hadeeth(18:16)

''நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்கு பயப்படுபவர்கள் கல்வி மான்கள் தான்.'' al-quran(35:28)



ISBN 978-955-627-120-1

இஸ்லாம் கல்வியினை லௌகீகம், ஆன்மீகம் என இரண்டு வகையிலும் போதிக்கின்றதனைக் காணலாம். இவைகளின் மூலம் கல்வி என்பது வாழ்வு முழுவதும் தேடிப்பெறவேண்டிய அனைத்துக் காலத்துக்கும் பொருத்தமான ஒன்றாகும்.

இஸ்லாமிய கல்வி தாபனங்கள் பார்ப்பின் இஸ்லாமிய கல்வியினைப் போதிப்பதற்கு மத்ரசா, அஹதிய்யா போன்ற அமைப்புக்களின் மூலமாக ஆன்மீகக் கல்வியையும் பாடசாலை, பல்கலைக்கழகம் மூலம் பௌதீகக் கல்வியினையும் பெற்றுக் கொள்ளலாம். இந்த வகையில் இஸ்லாம் பெண்களின் கல்வியினைக் ஊக்கப்டுத்துவதாக அமைந்துள்ளதனைக் காணலாம். பெண்கள் கல்வியை பெற்றுக்கொள்வதற்கு முன்னைய ஸஹாபிப் பெண்களான உம்மு ஸலமா, ஆயிஷா, அஸ்மா பின்த் அஸத், ஹன்ஸா, அர்வா, உமாமா, மைமனா, றகீகா, சுபைதா, சகீனா, சுஹிதா போன்றவர்களை உதாரணமாக குறிப்பிடலாம். இவர்கள் அனைத்துத் துறைகளிலும் பங்கு பெற்று ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாக காணப்படுகின்றனர்.

## 8. அறிமுகம் - கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி

கனுகட்டிய பிரதேசமானது குருநாகல் மாவட்டத்தில் நிகவரட்டிய வலயத்தில் அமைந்துள்ளது. அதாவது குருணாகல் மாவட்டத்தில் “ வன்னி ஹத்பத்துவ மாகுல் மெதகன் தஹய” மேற்கு கோரளை நிகவரட்டி வலயத்தில் ரஸ்னாயக்கப்புர பிரதேச சபைக்குள் அமைந்துள்ள ஏனைய கிராமங்களுடன் ஒப்பீடுகையில் பழமையான ஒரு பிரதேசமாகும். கனுக்கடிய என்பது அபுக்காகம, அவக்கறதளுவ, களுவாச்சிகம, முடத்தவ ஆகிய சிறு பிரதேசங்களையும் உள்ளடக்கி காணப்படுகின்றது. கனுக்கடிய 600க்கும் மெற்பட்ட குடும்பங்களையும் 2.6 சதுர கிலோ மீற்றர் குடியிருப்புப் பிரதேசத்தையும், 1.3 சதுர கிலோ மீட்டர் விவசாய நிலங்களையும் கொண்டுள்ளது.

கனுகடிய என்ற பெயர் வருவதற்கு ஓர் வரலாற்றுப் பின்னனி ஒன்று காணப்படுகின்றது. A-10 பாதையில் பயணித்த வியாபாரிகள் மாட்டு வண்டிகளை நிறுத்தி ஓய்வெடுத்ததோடு மாடுகளையும் புல் மேய்வதற்காக அவ்விடத்தில் கட்டினர். இச்சந்திக்கு அருகில் முடத்தவ குளம் காணப்படுவதால் சகல தேவைகளுக்கும் வசதியாக அமைந்துள்ளதனை காணலாம்.இங்கு கடைகளும் இருந்துள்ளன. எனவே மாடுகளை “கம்பங்களில் கட்டுதல்” (கனுவில் கட்டதல்) என்ற சொற்றொடர் “கனுக்கடிய” என திருபடைந்திருக்கலாம் என கூறப்படுகின்றது. அத்துடன் கனுக்கடிய பிரதேச மக்கள் பிற மதத்தவர்களிடம் இருந்து காணிகளை கொள்வனவு செய்து கனுக்கடிய பிரதேசத்தை விரிவுபடுத்திக் கொண்டனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மன்னர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர். அதனால் அவர்களை ஒவ்வொரு பரம்பரை பெயர்களைக் கொண்டே அடையாளப்படுத்திக் காட்டினார்கள். அப்பரம்பரைகளாவன :

- ராஜ கோபால முதியன்சலாகே
- கமரகல முதியன்சலாகே
- மடிகேமுதியன்சலாகே



ISBN 978-955-627-120-1

- ராஜ வன்னி

### 8.1 கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறும், அதன் வளர்ச்சிப்போக்கும்

1942 தொடக்கம் 1946 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட கல்வி ரீதியான மாற்றத்துடனே கனுக்கடிய பிரதேசத்தில் கல்வி ரீதியான தாக்கம் ஏற்பட்டது. 1950 களின் பின்னரே இப்பிரதேசத்தில் கல்வி வரலாறானது ஆரம்பமாகியது. இருப்பினும் 1959 க்கு பிறகே பெண்களின் கல்வியில் ஓர் வளர்ச்சி ஏற்படினும் பிரதேச மக்கள் பெரும்பாலானோர் தமது பெண் பிள்ளைகளை இக்காலப்பகுதியிலும் கல்வியினை கற்க விடுவதற்கு விரும்புவதில்லை.

இப்பிரதேச மக்கள் பெண் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டிய அவசியமில்லை எனவும், தமது பெயரை மட்டும் எழுத அறிந்திருந்தால் போதும் எனவும் எண்ணி பெண்பிள்ளைகளை பூப்பெய்தவுடன் வீட்டினுள் வைத்து விடுகின்றனர். இப்பிரதேச மக்கள் தமது பெண் பிள்ளைகளை கல்வி கற்க வைக்காமல் இருப்பதற்கு பல காரணங்களையும் முன்வைத்துள்ளதனை காணலாம். இருப்பினும் இப்பிரதேச மக்கள் பெண் பிள்ளைகளின் கல்விக்காக செலவழிக்க முன் வருவதில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

ஆரம்ப கால கட்டங்களில் இப்பிரதேச பெண்பிள்ளைகளிடம் கல்வி கற்கும் ஆர்வம் 20% வீதமாக காணப்படினும் இப்பிரதேச மக்களிடம் கல்வி தொடர்பான பூரண அறிவின்மை காரணமாக பெண் பிள்ளைகளை கற்க விடாமையினால் அப்பிரதேசத்தில் பெண்களின் கல்வியானது 10% வீதமாகவே காணப்பட்டது. ஆரம்ப கால கட்டத்தில் ஏனைய பிரதேசங்களை விட கனுக்கடிய பிரதேச பெண்களின் கல்வியானது பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டது.

1980 களின் பின்னரே கனுக்கடிய பிரதேச பாடசாலையில் உயர் தரம் ஆரம்பிக்கப்படினும் அக்காலப்பகுதிகளில் இப்பிரதேச கல்வியானது தேக்கம் அடைந்த நிலையிலேயே காணப்பட்டது. ஆயினும் 1959 ல் U.L கோலிசம் பீவியும், 1964 ல் O.M. சித்தி நிசாலியாவும் 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதனை அறிக்கையினூடாக அறிந்து கொள்ளலாம். 1993 இலும் S.A .அகீலா பானு எனும் மாணவி 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். 1990 முதல் 2000 வரையான காலப்பகுதியினுள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களுள் ஐந்து பெண் மாணவிகள் பல்கலைக்கழகம் தெரிவானார்கள் எனினும் அவர்கள் பல்கலைக்கழகம் செல்லவில்லை என்பதே உண்மையாகும்.

இக் கனுக்கட்டிய பிரதேச மக்கள் ஆரம்ப கால கட்டங்களில் பெண்பிள்ளைகளுக்கு உயர் கல்வி தேவை இல்லை எனும் மனப்பான்மையினால் தமது பெண்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கவோ, அதற்காக செலவு செய்யவோ முன் வராமையினால் இப்பிதேச முஸ்லிம் பெண்களின் கல்வி நிலையில் ஏற்ற தாழ்வுக் காணப்பட்டது. இதனை 1990 முதல் 2014 வரையான காலப்பகுதியில் இதன் வளர்ச்சி மூலம் கண்டுக் கொள்ளலாம்.



ISBN 978-955-627-120-1


**5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1990 - 2015**

| வருடம் | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1990 | 0 |
| 1991 | 0 |
| 1992 | 0 |
| 1993 | 1 |
| 1994 | 0 |
| 1995 | 0 |
| 1996 | 0 |
| 1997 | 0 |
| 1998 | 0 |
| 1999 | 2 |
| 2000 | 1 |
| 2001 | 0 |
| 2002 | 2 |
| 2003 | 1 |
| 2004 | 0 |
| 2005 | 1 |
| 2006 | 1 |
| 2007 | 3 |
| 2008 | 3 |
| 2009 | 1 |
| 2010 | 1 |
| 2011 | 2 |
| 2012 | 3 |
| 2013 | 5 |
| 2014 | 3 |
| 2015 | 2 |

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஊடாக 1990 தொடக்கம் 2006 வரையான கனுக்கடிய முஸ்லிம் பெண்களின் ஆரம்ப கல்வியில் தொடரான வளர்ச்சியினைக் காணலாம். இருப்பினும் 1990, 1991, 1992 ஆகிய காலப்பகுதிகளில் வளர்ச்சியினைக் காணமுடியவில்லை. 2007, 2008 காலக்ககுதியில் கூடிக் குறைந்துள்ளதனைக் காணலாம். இதனூடாக 1990 தொடக்கம் 2008 வரையிலான காலப்பகுதியில் இப்பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி நிலையானது மிகவும் பின்னடைந்த நிலையிலேயே காணப்பட்டது.




ISBN 978-955-627-120-1




5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1990–2015

க.பொ.த சாதாரண தரத்திலும் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் ஆரம்ப கால கட்டங்களில் வளர்ச்சியினைக் கண்டிராவிடினும் பிற்பட்ட காலங்களில் ஓரளவு வளர்ச்சியினைக் கண்டது. இப்பிரதேச பாடசாலையில் 1985 ஆம் ஆண்டிந்கு பின்னரே உயர் தரம் ஆரம்பிக்கப்பட்டது என வரலாறு கூறுகின்றது. 1990 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியினுள் பெண்களின் கல்வி வளர்ச்சியானது கூடிக் குறைந்துள்ளதனை காணலாம்.





பல்கலைக்கழகம் சென்றோர் விபரம் 1990 – 2010

மேற்குறிப்பிட்ட வரைபடத்தை பொருத்தவரையில் 1993, 1994 ,1995 ஆகிய காலப்பகுதியில் இப்பிரதேச பெண்களின் கல்வி நிலையானது 10 வீதமாகவும், தொடராக ஒரே மட்டத்திலும் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் உயர் கல்வியை தொடர்ந்த முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழகம் செல்லாமல் தமது கல்வியை விட்டும் இடைவிலகி கொண்டதுடன். இன்னும் சிலர் பல்கலைக்கழகம் செல்லாமல் கலைக்கல்லூரிகளுக்கு சென்றதனையும் விளங்கிக்கொள்ளலாம். இப்பிரதேசத்தில் 2008 ஆம் ஆண்டளவில் அதிகமான பெண் மாணவிகள் பல்கலைக்கழகம் தெரிவாகி இருப்பினும் இதனை தொடர்ந்து வந்த 2009 மற்றும் 2010 ஆகிய காலப்பகுதிகளில் பல்கலைக்கழகம் தெரிவானோரின் எண்ணிக்கை குறைவாகும்.




ISBN 978-955-627-120-1





பல்கலைக்கழகம் சென்றோரின் விபரக்கோட்டுப்படம் 1990-2010

இக்கோட்டுப் படம் மூலம் குறைந்துள்ளதனை எடுத்ததுக் காட்டுகிறது. 2008 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி பெரும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கையானது கூடி மீண்டும் 2009 ஆம் ஆண்டளவில் ஒரே அளவில் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளதனை சுட்டிக் காட்டுகின்றது. மேலும் இதே போன்று 1990 தொடக்கம் 2006 வரையிலான காலப்பகுதியினுள் கலைக்கல்லூரி தெரிவானோரின் எண்ணிக்கையும் இப்பிரதேச பெண்களின் கல்வி வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது.






ISBN 978-955-627-120-1




கலைக்கல்லூரி தெரிவானவர்கள் 1990 முதல் 2015 வரை

இந்த வரைப்படத்தின் மூலம் 1990 முதல் 2006 வரையான காலப்பகுதியினுள் இப்பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சிப் படிவமானது முன்னேற்றமடைந்துக் காணப்படவில்லை. 1990 முதல் 2006 வரையான காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் கலைக்கல்லூரி நுழைவு ஒரே மட்டத்தில் அதாவது 50% மாக காணப்பட்டது. இப்பிரதேச பெண்களின் கல்வி வளர்ச்சியானது பின்னடைவைக் கண்டிருப்பினும் பிற்பட்ட காலங்களில் ஓரளவு வளர்ச்சியைக் கண்டு மீண்டும் பின்னடைவைக் கண்டு மீண்டும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் இப்பிரதேச பாடசாலைகளில் மட்டுமன்றி வெளியிடங்களிளும் சென்று கல்வி கற்று வருவதனைக் காணலாம். எவ்வாறெனின் க.பொ.த சாதாரண தர பரீட்சையின் முன்னரும் பின்னரும் அறபுக் கல்லூரிகளுக்கு சென்று பல்கலைக்கழகம் சென்றுள்ளதனைக் காணலாம். மட்டுமன்றி கல்வியினை மட்டும் கற்று வரும் நோக்கில் சென்று கல்வி கற்று வருவதனைக் காணலாம். 100: 20 எனும் விகிதத்தில் கா.பொ.த சாதரணத்தரத்தின் பின்னர் வெளிப்பாடசாலைகளில் சென்று கல்வி கற்கும் மாணவிகளும் இல்லாமலில்லை.


கனுக்கடிய பிரதேசத்தில் 1000 க்கும் அதிகமான முஸ்லிம் பெண்கள் வாழ்ந்து வரினும் இப்பிரதேசத்தில் 50% மாகவே முஸ்லிம் பெண்களின் கல்வி அறிவானது காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் தற்போது உயர்கல்வியில் ஈடுபாடு காட்டும் நிலையினை பின்வரும் அட்டவணையின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

| கல்வி நிலை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| கா.பொ.த சாதாரண தரம் | 110 | 0.11மூ |
| கா.பொ த உயர் தரம் | 80 | 0.8மூ |
| பல்கலைக்கழகத்தில் கற்போர் | 60 | 0.6மூ |




ISBN 978-955-627-120-1

| | | |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தில் கற்போர் | 70 | 0.7மு |
| கலைக் கல்லூாயில் கற்போர் | 60 | 0.6மு |
| கலைக் கல்லூாயில் கற்போர் | 40 | 0.4மு |




மேற் காட்டப்பட்டுள்ள கல்வி சமூகத்தில் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு ஊக்குவிப்புக்களை வழங்ககுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது குறைவாகும்.

2007 தொடக்கம் 2014 வரையான 08 வருட காலப்பகுதியில் கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வியானது ஓரளவு வளர்ச்சிக் கண்டுள்ளதனைக் காணலாம். இருப்பினும் கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியானது கலைத்துறையுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனைக் காணலாம். இவர்களின் கல்வி வளர்ச்சியினை பல்கலைக்கழக மற்றும் கலைக்கல்லூரி நூழைவினுடாக விளங்கிக் கொள்ளலாம்.





மேலேயுள்ள அட்டவணைப்படி பார்ப்பின் 2007 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழகம் தெரிவான எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் அனைத்துப்



ISBN 978-955-627-120-1

பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவாகியுள்ளதனை தகவல்களுடாக அறிந்துக் கொள்ளலாம். 2007ல் 02 மாணவிகளும் 2008ல் 05 மாணவீகளும் தெரிவாகி மீண்டும் குறைவடைந்து 2011ல் 08 மாணவிகள் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளதனைக் காணலாம். அதன் பின்னரான காலப்பகுதியில் முஸ்லிம் பெண்களின் பல்கலைக்கழக வளர்ச்சியானது குறைவடைய ஆரம்பித்தது. 2012 மற்றும் 2014 ம் ஆண்டளவில் குறைவடைந்தே காணப்பட்டது.

இதே போன்று 2007 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் கலைக்கல்லூரி தெரிவாகிய தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்தரவுகளாவன




மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி பார்ப்பின் 2007, 2009, 2011 ஆகிய ஆண்டுகளில் கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்கள் கலைக்கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படவில்லை என்பதே உண்மையாகும். இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் கலைக்கல்லூரி தெரிவானது மிகவும் கீழ் மட்டத்திலும் மற்றும் சமமான மட்டத்திலும் காணப்படுகின்றது என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.

இப்பிரதேசத்தில் பாடசாலையானது கல்வியில் சிறந்த மட்டத்தில் காணப்படுகின்றதென்பது குறிப்பிடதக்க விடயமாகும். ஆனால் இப்பிரதேச பாடசாலையில் வேறு பிரதேச மாணவிகளும் கல்வி கற்கின்றனர் என தகவல்கள் மூலம் விளங்கிக் கொள்ளலாம். பாடசாலையில் கல்வி மட்டம் சிறப்பாக காணப்படினும் இப்பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வியானது பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. ஒரு சில மாணவிகள் உயர் கல்வினை கற்க முன் வரினும் அவர்கள் அனைவரும் கலைத்துறையினை மட்டுமே தெரிவு செய்கின்றனர். மட்டுமன்றி இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழகம் மற்றும் கலைக்கல்லூரிகளுக்கு தெரிவாகியிருப்பினும் அவர்களில் சிலர் பல்கலைக்கழகம் மற்றும் கலைக்கல்லூரிகளுக்கு செல்லாமல் கல்வியினை விட்டு விலகி திருமணம் எனும் பந்தத்தில் இணைந்துக் கொள்வதாக அறிக்கையினூடாக கண்டுக் கொள்ளலாம்.


கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வியினைப் பொறுத்தவரையில் சமகாலத்தில் உயர் தரம் வரையிலேனும் கல்வியினைத் தொடர்கின்றனர். இருப்பினும் ஒரு சிலரே கல்வியினைப் பூரணமாக கல்வியினைத் தொடர்வதனைக் காணலாம். அத்துடன் இலகுவான துறையினை மட்டுமே தெரிவும் செய்கின்றனர். மேலும் ஏதேனும் ஒரு தொழிலுக்காவே கல்வியினை



ISBN 978-955-627-120-1

கற்பவர்களாக காணப்படுகின்றனர். கனுக்கடிய முஸ்லிம் பெண்கள் தமது கல்வி அறிவை விருத்தி செய்துக் கொள்வதற்காக தேடல்களை மேற்கொள்வதென்பது குறைவாகவே காணப்படுகின்றது என ஆய்வின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| சஞ்சிகை | 77.6 |
| பத்திரிகை | 80.8 |
| தொலைக்காட்சி | 87.6 |
| வானொலி | 82.3 |
| கலந்துரையாடல் | 35.2 |
| அவதானம் | 27.6 |
| இன்டர்நெட் | 23.5 |




இப்பிரதேசத்தில் இருந்து இதுவரைக்கும் எந்தவொரு மாணவியும் மருத்துவம் மற்றும் பொறியியல் பீடத்துக்கு தெரிவாக வில்லை என்பதே உண்மையாகும். அத்துடன் ஒரேயொரு மாணவி 2010 ம் ஆண்டளவில் கலைத்துறையில் கற்று அதிகப்படியான வெட்டுப்புள்ளியினைப் பெற்று சட்டத்துறைக்கு தெரிவாகியதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். மேலும் 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவிகள் சிலர் கலைத்துறையினைக் கற்றாலும் பல்கலைக்கழகத்தில் வேறு துறை சார்ந்த பாடநெறிகளைக் கற்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இப்பிரதேச பெற்றோர்கள் தமது பெண்பிள்ளைகள் வேறு மொழிகளில் கற்பதனை விரும்புவதில்லை.

கா.பொ.த உயர்தரத்தில் சித்தியடையும் எண்ணிக்கையானது 2009ம் ஆண்டுகளை விட தற்போது குறைவடைந்துள்ளதனைக் காணலாம். 2015ம் ஆண்டு சித்தியடைந்த மாணவிகளுள் கனுக்கடிய மாணவிகள் இல்லையயென்பது உண்மையாகும். மேலும் இப்பிரதேச மாணவிகள் 03 பேர் வெளியிடங்களில் தமது கல்வியினை தொடர்ந்து பல்கலைக்கழகம் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடதக்க விடயமாகும். 1990 தொடக்கம் 2014 வரையானக காலப்பகுதியில மூன்றில் ஒரு பங்கு மாணவிகள் மார்க்கக் கல்வியினைக் கற்க முன் வந்துள்ளதனைக் காணலாம். மேலும் இப்பிரதேசத்தில் SLAS OFFICER, SLEAS OFFICER,TECNITIONS,PRINCIPAL,CUSTOM OFFICER,SAMURTHI OFFICER, AGRICULTER OFFICER, BANK MANAGERS போன்ற



ISBN 978-955-627-120-1

பதவிகளுள் பெண்கள் யாருமே பதவி வகிக்கவில்லை என்பதனை தகவல்கள் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். மட்டுமன்றி இப்பிரதேசத்தில் ஆசிரியாகளாக பணியாற்றும் சிலர் பல்கலைக்கழகம் மற்றும் கலைக்கல்லூரிகளில் கற்று தேர்ந்தவர்களல்ல என்பதும் உண்மையாகும். இவ்வாறான ஒரு சூழலே ஆய்வுப் பிரதேசத்தின் கல்விச் சூழலாக காணப்படுகின்றது.

**ஆலோசணையும் முடிவுரையும்**

இவ்வாய்வானது கனுக்கடிய பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி நிலைத் தொடர்பாகவுமஇ அவர்களின் கல்வியில் கலைத்துறைத் தாக்கம் தொடர்பாகவும் ஆராய்கின்றது. இவ்வாய்வானது இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் கல்வியினைக் கற்க ஒரளவு முன் வரினும் அவர்கள் அனைவரும் கலைத்துறையை மட்டுமே நோக்காகக் கொண்டு கல்வியினை தொடர்கின்றனர் என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதனால் இப்பிரதேச முஸ்லிம் மக்கள் மற்றும் கற்றோர்கள் இணைந்து இப்பிரதேச பெற்றோர்களுக்கும் முஸ்லிம் பெண் மாணவிகளுக்கும் கல்வி தொடர்பாகவும், ஏனைய துறைகள் தொடர்பாகவும் தெளிவான விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் பெண்களிலும் பல துறை சார்ந்தவர்களும்இ நிபுணத்துவம் பெற்றவர்களும் உருவாக்கப்படுவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## References

### Books


1. அலியார் யூ.ல்இ (1995)இ ‘‘கல்விலயல் நோக்கு’’இ பைத்துல் ஹிக்மா.
2. சந்திரசேகரன்.சோஇ (2008)இ ‘‘சமகால கல்வி முறைகளில் சில பரிமானங்கள்’’இ சேமமடு பொத்தகசாலை
3. சந்திரசேகரன்.பஇ (2011)இ ‘‘கல்வித் தத்துவம்’’இ குமரன் பதிப்பகம்
4. ஸவாஹிர் மொஹமட் அஸீமஇ ‘‘அபுக்காகம் முஸ்லிம்களின் வரலாறு’’இ ஐபீசி அச்சகம்.
5. ஹஸ்புல்லா எஸ்.எச்இ சைபுதீன் என்.பீ.எம்இ (2008)இ ‘‘இலங்கை முஸ்லிம்களின் கல்வி (பெண் கல்வியும்இ உயர் கல்வியும்)இ முஸ்லிம் பெண்களின் ஆராய்ச்சி செயல் முன்னனி.
6. Azeez.A.M.A, (2009),”Muslim Education in Sri lanka”, AJ Prints (pvt) Ltd.
7. Palmer.A, (2004),”Fiffty Great Modern Thinkers on Education”, USB Publisher.
8. Tony Bush and David Middlewood, (2005),”Leading and Managing People in Education”, SAGE Publisher.
9. Rao.V.K, (2003),”Educational System”, Efficent Theories”, Efficent Offset Printer.
10. Roshani Hashim, (2004),”Steps towards Islamization of knowladege”, Muslim Youth Movement.




ISBN 978-955-627-120-1

**Magazines**

1. Sunday, Obsever, 30th April 1995.
2. Veerakesary, 26th October 2007.
3. Thinakaran, 28th May 2009.
4. Nawamani, 27th December 2009.
5. Veerakesary, 10th September.
6. Veerakesary, 11th September.
7. இமாம் யூசுப் கர்ளாவி 2000 ஜனவரி – மார்ச் “ இஸ்லாமிய கல்விப் பாரம்பரியம் (பழைமை வாதத்திற்கும் புதுமைவாதத்திற்கும் இடையில் )” இஸ்லாமிய சிந்தனை.

**Research Articles**

1. Arshiah Parween, (2013), “Challenging Sterotypes Educational Aspirations of Emirati and Indian Muslim Women”.
2. A,al,Hibri, (1997), “ Islam Law and Custom, Redefining Muslim Women’s Rights”
3. Brokfield.M, (2013), “The Impact of Education A case Study of Muslim Women in Education”.
4. Farzaneh Khosrojerdi, (2015), “Muslim Female Students and Their Experiences of Higher Education in Canada.”
5. Galloway S.D, (2014), “The Impact of Islam as a Religion and Muslim Women Education.”
6. Hamdan A, (2005), “Women and Education in Saudi Arabia challenges and…”
7. Hameed Naseem Rafiabed, (2007), “Challenges to Religious and Islam: A study of Muslim Movements.
8. Ilyas S.U, (2005), “The Challenges Faced by Muslim Female Education and the…”
9. Liman MSH, (2001), “Muslim Women and Challenges of Western Education.”
10. Shinde. S.V, (2002), “Educational Status of Muslim Women in India.”

**Web Sites**

1. http://www.Missionislam.com/knowledgeSri lanka.htm.
2. http://www.sailanmuslim.com/news/Muslim-and-Sinhalese-Longtimeeconomic-allies.
3. http://www.islamonline.net.
4. http://www.islamkalvi.net



ISBN 978-955-627-120-1

5. .http://www.jaffnamuslim.com
6. http://www.allahuakbar.blogspot.com
7. http://dawahworld.com
8. http://www.islamiyapenmani.com
9. http://www.iniyaislam.com
10. http://www.whyislam.org




ISBN 978-955-627-120-1